©
தமிழ்நாடு அரசு
2010

கையெழுத்துத் தொடர்

# நிதி (படிகள்)த் துறை

## அரசு ஆணை எண்.391, நாள் 07.10.2010.

*(புரட்டாசி 21 , திருவள்ளுவர் ஆண்டு 2041)*

**மாற்றுத் திறனாளிகள்** – ஊர்திப்படி – மாற்றுத் திறனாளிகளுக்கு திங்கள்தோறும் வழங்கப்படும் ஊர்திப்படி ரூ.300/–லிருந்து ரூ.1000/– ஆக 1.10.2010 முதல் உயர்த்தி ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**பின்வருவனவற்றைப் படிக்கவும்:–**

1. அரசாணை நிலை எண். 667, நிதி ( ஊதியப் பிரிவு)த் துறை, நாள் 27.6.1989.
2. அரசாணை நிலை எண். 445, நிதி ( ஊதியப் பிரிவு)த் துறை, நாள் 31.8.1999.
3. அரசாணை நிலை எண். 236, நிதி ( ஊதியப் பிரிவு)த் துறை, நாள் 1.6.2009.
4. மாற்றுத் திறனாளிகளின் நலத்துறை ஆணையரின் கடிதம் எண். 8719 / மா. தி. ந. 3.1/2009, நாள் 13.9.2010

* * * *

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத் திறனாளிகளுக்கு ஊர்திப்படி, நிர்ணயிக்கப்பட்ட சில நிபந்தனைகளின் அடிப்படையில் ரூ.50/– திங்கள்தோறும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் இவ்வூர்திப்படி திங்கள்தோறும் ரூ.150/– ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அலுவல் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மாற்றுத் திறனாளி அரசு பணியாளர்களுக்கு ஊர்திப்படியாக (Conveyance Allowance) திங்களொன்றுக்கு ரூ.150/– வழங்கப்பட்டதை இரு மடங்காக உயர்த்தி ரூ.300/– ஆக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத் திறனாளிகளின் நலத்துறை ஆணையர் மாற்றுத் திறனாளிகள் பொது போக்குவரத்தினை அவர்களது இயலாமை காரணமாக பயன்படுத்துவதில் சிரமம் உள்ளதால் தனியார் போக்குவரத்தினை பயன்படுத்தும் போது அதிக செலவினம் மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தங்களது சொந்த வாகனங்களை பயன்படுத்தும் போது, எரிபொருள் செலவினம் அதிகமாவதாலும், தமிழக அரசில் பணிபுரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஊர்திப்படியை உயர்த்துவது அவசியம் என குறிப்பிட்டும், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத அலுவலர்கள், அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு தற்போது

திங்கள்தோறும் வழங்கப்படும் ஊர்திப்படியை (Conveyance Allowance) ரூ.300/—லிருந்து ரூ.1000/—ஆக உயர்த்தி வழங்குமாறு அரசிடம் கோரியுள்ளார் .

**3.** மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் கருத்துருவினை ஏற்று அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத அலுவலர்கள், அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு தற்போது திங்கள்தோறும் வழங்கப்படும் ஊர்திப்படியை ரூ.300/—லிருந்து ரூ.1,000/— ஆக (ரூபாய் ஆயிரம் மட்டும்) 1.10.2010 முதல் உயர்த்தி வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. சண்முகம்**
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

அனைத்து அரசுச் செயலாளர்கள்.
செயலாளர், சட்டமன்ற பேரவைச்செயலகம் சென்னை—9
ஆளுநரின் செயலாளர், ஆளுநர் மாளிகை, சென்னை – 32,
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், சென்னை – 32,
அனைத்து தலைமைச்செயலக துறைகள், சென்னை—9.
அனைத்து தலைமைச்செயலக துறைகள்(பட்டியல் ), சென்னை—9.
அனைத்து துறைத் தலைவர்கள்.
சமூக நலத்துறை இயக்குநர், சென்னை—5.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை—18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை—18 .
அனைத்து கருவூல அதிகாரிகள்.
ஆணையாளர், மாநகராட்சி, சென்னை / மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர்.
உள்ளாட்சி நிதிக் கணக்கு இயக்குநர், சென்னை—2.

<u>நகல் பெறுநர்</u>
நிதித்துறையிலுள்ள பிரிவுகள் அனைத்தும், சென்னை—9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி : அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்